www.padippakam.com

Liberation Tigers Of
TAMIL EELAM



# வேருக்கு நீர் பாச்சுவோம்

## கிட்டம்மான் 99

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு:

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகம்

ஒகஸ்ட் 1998

படிப்பகம்

www.padippakam.com



**அன்பார்ந்த பிரான்சு வாழ் தமிழ் மக்களே,**

## தமிழீழம் உருவாகி வருகிறது!

சிங்கள பௌத்த இனவெறி அமைப்பின் அடக்கு முறைகளிலிருந்து – இனப்படுகொலைகள் பற்றிய பயத்திலிருந்து – பொருளாதார புறக்கணிப்பு களிலிருந்து – பண்பாட்டு அச்சுறுத்தல்களிலிருந்து விடுதலை பெற்று, தமது தலைவிதியை தாமே நிர்ண யிக்கும் உரிமையுடன் கூடிய வளமான எதிர் காலத்தை தமிழ் மக்களுக்குத் தரக்கூடிய விடுதலைப் போர் கூர்மையடைந்து வருகிறது.

கடலிலும் – தரையிலும் ஒரு தேசிய இராணுவத் திற்குரிய கட்டமைப்புக்களுடன் எதிரிப் படைகளை நாம் எதிர்கொண்டு போராடி வருகிறோம்.

எமது தாயகத்தில் குவிக்கப்பட்டுள்ள எதிரியின் 100,000–ற்கும் மேற்பட்ட தரை – கடல் – வான் படை களையும், துணைப்படைகளையும் விரட்டியடித்து, எல்லைகளை வரையறை செய்து ஆட்சியை நிறுவு வதற்கான அடிப்படைத் தேவை பலம் மிக்க, மரபு வழிச் சமரை நடாத்தக்கூடிய தமிழர் விடுதலை இராணுவமே ஆகும்.

இன்று எம்மிடம் அது உருவாகி வருகிறது. பீரங்கி கள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் மரபுவழி சமரை நடாத்தக்கூடிய ஆற்றலுள்ள பலரக ஆயுதங் களை பாவிக்கும் படையணிகள் பயிற்றப்பட்டு உரு வாக்கப்பட்டுள்ளன.

கேணல் கிட்டு பீரங்கிப் படையணி, விக்டர் கவச எதிர்ப்பு அணி போன்ற மரபுவழி சமருக்கான படைப் பிரிவுகளை முழுமையடையச் செய்வது விடுதலைப் போரின் இன்றைய தேவைகளாகும். இந்தப் பணி கடினமானது. பாரிய நிதித் தேவையைக் கொண்டது. ஆயினும் அத்தியாவசியமானது.



படிப்பகம்

www.padippakam.com


புலம்பெயர் வாழ் தமிழீழ மக்கள்தான் இச் சுமையின் கனத்தை பகிர்ந்துகொள்ள வேண்டியவர்கள் ஆவர்.

இந்த நோக்குடன் 99ம் ஆண்டில் எம் மக்களின் விடிவுக்கு பலம் சேர்க்கும் பலத்தை திரட்டுவதற்காக 'கிட்டம்மான் 99 நிதியம்' உருவாக்கப்பட்டுள்ளது.

உங்கள் உச்சப் பங்களிப்பை வழங்கி இன்றைய எமது உச்சக்கட்டப் பணியை பூர்த்திசெய்யுங்கள்.

**ஒரு நிமிடம்**

இந்தப் பணி வரலாறு உங்களுக்கு தந்த பொறுப்பாகும்.

விடுதலை பெற வேண்டும் என்ற தீர்மானத்தை மனதிலே சுமந்து உயிரை அர்ப்பணிக்கும் தலைமுறையின் கனவை நனவாக்க வேண்டியதும் உங்கள் பணியாகும்!

இந்தத் தலைமுறை சுமக்கும் துன்பங்கள் அனைத்தும் அடுத்த தலைமுறையின் பிரகாசமான அமைதியான அடித்தளங்களாக அமையும்.




படிப்பகம்

www.padippakam.com



# வெற்றியை நமதாக்குவோம்

**(வன்னிச் சமர் பற்றிய தேசியத் தலைவரின் உரையிலிருந்து)**

★ "ஜெயசிக்குறு"ச் சமர் சாதாரண சமரல்ல. சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக, எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர் இது. இந்தச் சமரில் எதிரியானவன் தனது முழுப் பலத்தையும் வளத்தையும் குவித்துப் போரிட்டான். மூன்று பெரும் படைப்பரிவுகளைச் சேர்ந்த முப்பதினாயிரம் இராணுவத்தினரும், விசேட பயிற்சிபெற்ற சிறப்புப் படையணிகளும், பின்னணிப் படைகளாகக் கடற்படையினரும், காவற்துறையினருமாக பாரிய படைப்பலத்தோடு இந்தச் சமர் நிகழ்ந்தது. கனரக ஆயுத சக்தியாக பெருமளவு பீரங்கிகளும், டாங்கிகளும் தரைப்படைக்கு வலுச் சேர்க்க ஆகாயப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்களும், தாக்குதற் ஹெலிகளும் இந்தச் சமரில் பெரும் பங்கு வகித்தன. ஒரு பகை நாடு மீது ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவது போன்று சிங்கள தேசம் தனது படைபலச் சக்தியை ஒன்று குவித்து, தமிழீழத்தின் இதய பூமியான வன்னி மண் மீது படையெடுத்தது.

★★★

★ "ஜெயசிக்குறு" இராணுவத்தை எதிர்கொள்ள நாம் தயார் நிலையில் இருந்தோம். பெரும் எடுப்பிலான ஒரு மரபுவழிப் போருக்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் எமது இராணுவக் கட்டமைப்பைச் சீர்செய்து, ஒழுங்கமைத்து இருந்தோம். முல்லைத்தீவில் கிட்டிய மாபெரும் வெற்றியை அடுத்து, எமது படைக்கல சக்தி பலம் பெற்றிருந்தது. இந்த ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்து, பீரங்கிப் படையணி, டாங்கி எதிர்ப்புப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய படைப்பிரிவுகளைக் கட்டியெழுப்பினோம். இறுக்கமான ஒழுங்கமைப்புடன் பன்முகத் தாக்குதலை நிகழ்த்தவல்ல படையணிகளாக இவை உருவாக்கப்பட்டன. எதிரியின் படை நகர்த்தல் போருபாயம் பற்றிய எமது நீண்டகால அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு, எதிரியைத் திகைப்பூட்டும் நுட்பமான தாக்குதல் உத்திகளையும், தற்காப்பு முறைகளையும் வகுத்தோம். கேந்திரமான இடங்களில் மிக உறுதியான பாதுகாப்பு நிலைகளை அமைத்தோம். இப்படியாக, சிங்களத்தின் மிகப்பெரிய படையெடுப்பை எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டோம்.

★★★


★ "ஜெயசிக்குறு"ச் சமரில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் தனது இலக்கை அடைவதற்காக சகலவிதமான தந்திரோபாயங்களையும் கையாண்டது. போரியல் விஞ்ஞான ஏடுகளிலுள்ள புதிய, புதிய உத்திகளையும் பரீட்சித்துப் பார்த்தது. போதாக்குறைக்கு அந்நிய இராணுவ மேதாவிகளின் போர்முறைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. ஆயினும் இந்தப் போர்த்தந்திரங்கள் புலிகளிடம் பலிக்கவில்லை. இவற்



படிப்பகம்

www.padippakam.com


| புலிகள் நடாத்திய வலிந்த தாக்குதல்கள் | | | |
|---|---|---|---|
| திகதி | இடம் | இராணுவ உயிரிழப்பு | இராணுவ தரப்பு தளபாட இழப்புக்கள் |
| 10.06.97 | தாண்டிக்குளம் விநியோக மையம் | 325 | ஆயுதக் களஞ்சிய எரிப்பு, எம்.ஐ.-24 உலங்குவானூர்தி அழிப்பு, 5 டாங்கிகள் தகர்ப்பு, நொச்சிமோட்டை பாலம் தகர்ப்பு |
| 24.06.97 | பெரியமடு ஆட்லறி நிலைகள் | 185 | 120 மி.மீ ஆட்லறி பீரங்கி 01, ஆட்லறி வண்டிகள் 05, ஆட்லறி எறிகணைகள் 300, இராணுவ வாகனங்கள் கைப்பற்றப்பட்டன |
| 01.08.97 | ஓமந்தை – ரம்பைக்குளம் | 135 | அதிநவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன |
| 05.10.97 முதல் 09.10.97 வரை | கரப்புக்குத்தி விஞ்ஞானகுளம் | 500 | 81 எம்.எம், 60 எம்.எம் மோட்டார்கள் - 36, 50 கலிபர்கள் - 02, பல்வேறு ரக எறிகணைகள் 10 ஆயிரத்துக்கு மேல், இராணுவ வாகனங்கள்-34 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன |




படிப்பகம்

## ஜயசிக்குறு துருப்புக்கள் மீதான முக்கிய எதிர்த் தாக்குதல்கள்

| திகதி | இடம் | இராணுவ உயிரிழப்பு | இராணுவ தரப்பு தளபாட இழப்புக்கள் |
|---|---|---|---|
| 16.05.97 | ஓமந்தைப் பகுதி | 29 | இரு டாங்கிகள் அழிப்பு |
| 24.05.97 | இறம்பைக்குளம் | 20 | இரு டாங்கிகள், ஒரு துருப்புக் காவி அழிப்பு, 2 டாங்கிகள் பலத்த சேதம் |
| 23.06.97 | புளியங்குளம் நோக்கி | 14 | ஒரு டாங்கி அழிப்பு, 2 டாங்கிகள் சேதம் |
| 07.08.97 | புளியங்குளம் நெடுங்கேணி வீதி | 61 | இரு டாங்கிகள் அழிப்பு, 2 டாங்கிகள் சேதம், |
| 19.08.97 | பழைய வாடியிலிருந்து புளியங்குளம் நோக்கி | 50 | துருப்புக்காவி கைப்பற்றப்பட்டது |
| 20.08.97 | பழைய வாடியிலிருந்து புளியங்குளம் நோக்கி | 100க்கு மேல் | ஒரு டாங்கி அழிப்பு, 2 டாங்கிகள் சேதம் |
| 26.08.97 | புளியங்குளம் நோக்கி | 25க்கு மேல் | ஒரு டாங்கி அழிப்பு, 2 டாங்கிகள் சேதம் |
| 11.09.97 | புதூர் பகுதி | 40க்கு மேல் | |
| 30.09.97 | கனகராயன் குளம் | 50க்கு மேல் | |
| 04.12.97 | மன்னகுளம் | 300 | எல்.எம்.ஜி-36, ஜி.பி.எம்.ஜி-05, மோட்டார்கள்-03, ஆர்.பி.ஜி.கள்-05, 40 எம்.எம். பிஸ்ரல்கள்-13, சினைப்பர்கள்-04, துப்பாக்கிகள்-118 கைப்பற்றப்பட்டன |
| 14.02.98 | மூன்றுமுறிப்பு நோக்கி | 60 | |
| 24.02.98 | கரிப்பட்டமுறிப்பிலிருந்து ஒலுமடு நோக்கி | 50 | எல். எம். ஜிக்கள் - 15 கைப்பற்றப்பட்டன |
| 14.03.98 | மாங்குளம் நோக்கிய மும்முனை நகர்வு | 18 | |
| 20.04.98 | மாங்குளம் நோக்கிய மும்முனை நகர்வு | 60 | 3 டாங்கிகள் அழிப்பு 3 டாங்கிகள் பலத்த சேதம் |



படிப்பகம்

www.padippakam.com


றினால் புலிகளின் பாதுகாப்பு வியூகங்களை உடைக்க முடியவில்லை. இத்தந்திரோபாய முன்னேற்ற முயற்சிகள் எதிரிக்குப் பின்னடைவுக ளையும் பேரிழப்பக்களையுமே ஏற்படுத்தியது.

★★★

★ வன்னிக்களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக் கம் காட்டவில்லை. மாரிப் பெருமழையும், உறையவைக்கும் பனியும், கோடையின் கொழுத்தும் வெயிலும், பாம்பும், நுளம்பும், மலேரியாவுமாக வன்னிக் காட்டின் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போர் ஓய்ந்த வேளையிலும் எமது போராளிகள் ஓய்வெடுத்துக்கொள்ள வில்லை. பதுங்குகுழிகள் வெட்டி, பாதுகாப்பு அரண்கள் கட்டி, அந்தக் காப்பரண்களில் குடியிருந்து, இரவு பகலாக விழித்திருந்து, எம் மண் ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

★★★

★ பல்வேறு பிரிவினரதும் ஒட்டுமொத்த முயற்சிகள் ஒன்றுகுவிக்கப்பட்டதா கவே இப்பாரிய படையெடுப்பிற்கு நாம் முகம் கொடுத்தோம். ஒவ் வொரு பிரிவும் தனது பணியைத் திறம்படச் செய்தது. எதிரியின் பல முன்னேற்ற முயற்சிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்ட பீரங்கிப் படைப் பிரிவு, பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு எதிரியின் நிலைகளை யும், நகர்வுகளையும் கண்காணித்து அறிவித்த வேவுப் பிரிவு, எதிரியின் டாங்கி, கவச வாகன அணிகளைச் சிதைத்த டாங்கி எதிர்ப்பு விசேட அணி, எதிரியின் மனவுறுதியைச் சிதறடித்த கரும்புலி அணி, தாக்கும் ஹெலிகள் பலவற்றை களத்திலிருந்து அகற்றிய விமான எதிர்ப்பு அணி ஆகிய படைப்பிரிவுகளின் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

★★★

★ “ஜெயசிக்குறு”ச் சமர் சந்திரிகா அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளி விட்டிருக்கிறது. தமிழரின் தாயக மண்ணை இராணுவ பலத்தால் அடக்கி ஆளவேண்டுமென்ற ஆதிக்க வெறி சிங்கள தேசத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது.

நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண் ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிர மிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் வரை “ஜெயசிக் குறு”ச் சமர் ஓய்ந்துவிடப் போவதில்லை.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்



படிப்பகம்

www.padippakam.com


# தமிழ் உழைப்பாளர்கள்! வரலாறு உங்களை பதிவுசெய்யும்

தமிழீழ விடுதலைப் போரின் வெற்றியானது, போரை வென்றெடுக்கும் ஆற்றலுள்ள பலமான விடுதலை இராணுவத்தை நாம் கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது.

நாம் சுதந்திரம் அடைய உரித்துடையவர்கள் என்பதை அனைத்துலக சட்டங்கள் அங்கீகரிக்கின்றன.

தமிழர்களின் சனநாயக அரசியல் அபிலாசைகளை பாதுகாப்பதற்கான சாத்தியமான ஒரே தீர்வு பூரணமாக விடுதலையடைந்த தமிழீழமே என்பதை உலக சமூகம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய சூழ்நிலை கனிந்து வருகின்றது.

ஆயினும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு நீக்கப்படாத வரை எம் தமிழர் தாயகம் அழிவுகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்கொண்டே ஆகவேண்டும்.

சிங்கள பொருளாதாரத்தின் 30 % மேற்பட்ட பகுதி இராணுவத்தை பலப்படுத்த நேரடியாக பாவிக்கப்படுகிறது. சிங்கள இனவெறியும் – போர் வெறியும் அவர்களது இராணுவத்தின் ஆயுத தளபாட தேவைகளையும் பொருளாதாரச் சுமைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

250,000 ஆயுதம் தரித்த சிங்களப் படையினர் முப்படைகளிலும், துணைப்படைகளிலும் இயங்கிவருகின்றனர்.

கிபீர், எம்.ஐ.-24, எம்.ஐ.-35 ரக யுத்த உலங்குவானூர்திகள், சீன, இஸ்ரேலிய கடற்கலன்கள் எனபன சிங்கள ஆயுத தளபாட பலத்தை அதிகரிக்கின்றன.

இவற்றிற்கு எதிரான எமது போர், போராளிகளின் உயரிய அர்ப்பணிப்பையும் - வீரத்தையும் அடித்தளமாகக்


படிப்பகம்

www.padippakam.com



கொண்ட விடுதலை இராணுவத்தினரால் நடாத்தப்படுகிறது.

எமது படையணிகள் ஒரு மரபுவழி போருக்குரிய முழுமையை நோக்கி விரைவாக பயணம் செய்து வருகின்றனர். ஆயினும் மரபுவழி போர் முறைக்கான கட்டமைப்பு பாரிய பொருளாதார பக்கபலமுள்ள சக்திகளால்தான் உருவாக்கப்படக்கூடியது.

தமிழ்த் தேசியத்தின் தீர்க்கமான ஆதரவு இத் தேசிய முயற்சிக்கு ஆதரவாய் அமையவேண்டும். உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களின் உணர்வுபூர்வமான பங்களிப்புக்கள்தான் விடுதலை இராணுவத்தை முழுமைப்படுத்தும். முழுமையடைந்த விடுதலை இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து எதிரிப்படைகளை விரட்டியடிக்கும்.

இவ் உணர்வுபூர்வமான தமிழ்த் தேசியத்தின் ஒன்றுகூடலை அச்சத்துடன் பார்க்கும் சிங்கள இனவாத பூதம் உலகம் பூராவும் பரந்து வாழும் தமிழர்களது அடிப்படை உரிமைகளைக் கூட பறித்துவிட முயல்கிறது.

ஆயினும் தமிழர்களது தேசிய அபிலாசைகளை உலகம் அங்கீகரித்து வருகிறது. போரை சமாதானத்திற்காக நடாத்துவதாகக் கூறி இனப்படுகொலைகளை நடாத்தும் எதிரியை உலக சமூகம் இனங்காண முற்படுகின்ற இவ் வேளையில் நாம் கரங்களை கோர்த்து எம் விடுதலை இராணுவத்தை பலப்படுத்த ஒன்றிணைவோம்.

ஒவ்வொரு உழைப்பாளியும் - ஆணாயினும், பெண்ணாயினும் – தம் உணர்வுபூர்வமான பங்களிப்பை 'கிட்டம்மான் 99' நிதியத்திற்கு வழங்குவதன் மூலம் பலம்பெற்ற தமிழர் சக்தியை பிரசவிப்போம்!

**வரலாறு உங்கள் பங்களிப்பை பதிவுசெய்யும்!**



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



## நீங்கள் என்றோ ஒருநாள் தாயகம் நோக்கிய பயணத்தை தொடர்வீர்கள்

## அன்று எமது தாயகம் ஒரு சுதந்திர தேசமாக அமைந்திருக்கும்

### புலம்பெயர் தமிழ் மக்களுக்கு தேசியத் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளிலிருந்து...

.... உலகில் எந்தப் பகுதியில், எந்தச் சூழலில், எந்தத் தகுதியில் வாழ்ந்தாலும் தமிழீழத்தில் தான், அந்தத் தாயக பூமியில்தான் உங்கள் வேர் ஆழப் புதைந்து கிடக்கின்றது. இந்த மண்ணில் தான் உங்கள் இனத் தனித்துவத்தின் அடையாளம் ஆழப்பதிந்து கிடக்கின்றது. இந்தத் தாயாக தேசம் எதிரியின் ஆதிக்கப்பிடியில் சிக்கி அழிந்து போகாது பாதுகாப்பதில் உங்களுக்கு பெரும் பங்கு உண்டு. பொறுப்பு உண்டு. கடப்பாடு உண்டு....

..... இன்றைய காலமும் சூழலும் உங்களது பங்களிப்பைத் தான் வேண்டிநிற்கிறது. காலம் காலமாக எமது போராட்டத் திற்கு உதவி வருகின்றீர்கள். பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்து வருகின்றீர்கள். உங்களது பங்களிப்புக்கள் எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பெரிதும் உதவி யாக இருந்திருக்கின்றது. ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு இதனை என்றும் பதிவு செய்து வைத்திருக்கும்....

தமிழர் தேசத்தின் பாதுகாப்பும் எதிர்கால அரசியல் வாழ்வும் இன்றைய போரின் போக்கில் தான் தங்கியுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழினத்தின் போராட்ட சக்தியா கிய எமது இயக்கத்தின் பலத்திற்கும் வளத்திற்கும் வலுச் சேர்ப்பது உங்களது பொறுப்பும் கடமையும் ஆகின்றது.

படிப்பகம்